மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 07 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.18/2024
அ.வ.எண்.99/2022

1. கருப்பண்ணன் (இறந்தவர்)
2. வளர்மதி
3. உதயகுமார்
4. உதய கண்ணன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. பரமசிவம்
2. மாதம்மாள்
3. முத்துசாமி
4. பழனிசாமி
5. ஜெயம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 06.06.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.சத்தியப்பிரியா அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சிவபிரகாசம் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.செல்வம் அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும் இருந்து வந்த இம்மனுவில் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் விதி 28(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் தாவாவில் 11.06.2024 ம் தேதியன்று போடப்பட்டுள்ள வாய்தா தேதியை இன்றோ அல்லது அருகாமையிலுள்ள தேதிக்கோ முன்கொணர்ந்து உத்தவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) மனுதாரர்கள்/வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, வழக்கு நிலுவையில் உள்ள போது 1ம் எதிர்மனுதாரர் வெள்ளார் முதல் மேச்சேரி வரை செல்லும் தார்சாலையிலிருந்து ச.எண்.169/1B4 வழியாக ச.எண்.169/1B3 நிலத்திற்கு மேற்கு நோக்கி செல்லும் சுமார் 156 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்ட மண் பாதையை 20.05.2024ம் தேதியன்று டிராக்டர் வைத்து ஒட்டி அழித்துவிட்டனர். அது குறித்து மேச்சேரி காவல் நிலையத்தில் புகார் செய்ததின்பேரில் 1ம் எதிர்மனுதாரரை விசாரித்த போது 2ம் மனுதாரரின் பட்டா நிலத்தை சுற்றி கம்பிவேலி போடுவதாக மிரட்டி வருவதாக கூறினார். அவ்வாறு கம்பிவேலி வைத்து அடைத்துவிட்டால் மனுதாரர்கள் எவ்வகையிலும் அவர்களது நிலத்தை அடைய முடியாமல் போய்விடும்.

(ii) மேலும் மனுதாரர்களது வீட்டை விட்டு வெளியேற தாவா பாதையை தவிர வேறு வழியில்லை. தாவா மண்பாதையின் பௌதீக தன்மையையும் 1ம் எதிர்மனுதாரர் மாற்ற முயற்சி செய்து வருகிறார். எனவே மேற்படி அசல் வழக்குடன் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள மனுவும், ஆணையர் நியமிக்க கோரும் மனுவும் வருகின்ற 11.06.2024ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி இடைநிலை மனுக்களை அவசரமாக விசாரிக்க வேண்டி வாய்தா தேதியை முன் கொணர்ந்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே தாவாவில் 11.06.2024ம் தேதியன்று போடப்பட்டுள்ள வாய்தா தேதியை இன்றோ அல்லது அருகாமையிலுள்ள தேதிக்கோ முன்கொணர்ந்து உத்தவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) மனு பொய். சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. ச.எண்.169/1B4 என்பது 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட நிலமாகும். அதில் மனுதாரர்கள் கூறுவது போல 156 அடி நீளம், 10 அடி அகல பாதை உள்ளதாக சொல்லியுள்ளது கற்பனையானது. கடந்த 11.07.1975ல் சின்னதாயி மற்றும் 14 நபர்கள் சேர்ந்து

தடபாத்திய உடன்படிக்கை பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளனர். அதில் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் இறந்துபோன கருப்பண்ணன் தகப்பனார் அழகப்பன் ஆகியோர் தரப்பினர்கள். அதன்படி ச.எண்.169/1ல் 10 அடி அகலமும், கிழமேல் 175 அடி நீளமுள்ள தடமும், ச.எண்.173/1ல் கால்நடை தடமும் விடப்பட்டது. அது புலவரைபடத்திலும் உள்ளது.

(ii) அதன்படி ச.எண்.169/1B3 லிருந்து வடக்கே சென்று ச.எண்.169/1B2 வழியாக கால்நடையாகவும், ச.எண்.169/1A2, 1A1 வழியாகத்தான் செல்ல வேண்டும். 1ம் மனுதாரரின் தகப்பனார் அழகப்பன் ஒப்புக் கொண்டு எழுதி பதிவு செய்தபின் 1975 லிருந்து அதை பயன்படுத்தி வந்து 2022ல் 1ம் எதிர்மனுதாரர் நிலம் வழியாகத் தான் செல்வதாக ஒரு தவறான மாதிரி வரைபடத்தை கொண்டு பொய் வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறார்கள். இந்நிலையில் 1ம் மனுதாரர் இறந்ததை பயன்படுத்தி 1ம் எதிர்மனுதாரர் நிலமான ச.எண்.169/1B4ல் பாதை அமைக்க முற்பட்டு அது தடுக்கப்பட்டது. பின்னிட்டு 20.05.2024ல் ஒரு பொய்புகாரை கொடுத்து அதைக் கொண்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 11.06.2024ல் போடப்பட்டுள்ள தாவாவை முன்னெடுப்பு செய்வதால் அதிலுள்ள மனுக்களும் முன்னிட்ட தேதிக்கு எடுக்க முடியாது. அதற்கு தனியே மனுதாக்கல் செய்ய வேண்டும்.

(iii) எப்படியாவது 1ம் மனுதாரரை மிரட்டி அவரின் பட்டா நிலத்தில் வண்டித்தடம் அமைக்க வேண்டி இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் நேரத்தை வீண்விரயம் செய்து வருகிறார்கள். ச.எண்.169/1B4ல் உள்ள விவசாய நிலத்தில் வண்டித்தடம் ஏதும் இல்லை. அதற்கு எந்தவொரு ஆவணமும் மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து ஏற்கனவே பதிலுரை தாக்கல் செய்துள்ள நிலையில் தாவா விசாரணைக்கு உத்தரவு செய்ய 1ம் எதிர்மனுதாரர் பிரார்த்திக்கிறார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும்

எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்குடன் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள மனுவும், ஆணையர் நியமிக்க கோரும் மனுவும் வருகின்ற 11.06.2024 ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தாவா மண்பாதையின் பௌதீக தன்மையையும் 1 ம் எதிர்மனுதாரர் மாற்ற முயற்சி செய்து வருகிறார் என்றும், 2 ம் மனுதாரரின் பட்டா நிலத்தை சுற்றி கம்பிவேலி போடுவதாக மிரட்டி வருகின்றனர் என்றும், அவ்வாறு கம்பிவேலி வைத்து அடைத்துவிட்டால் மனுதாரர்கள் எவ்வகையிலும் அவர்களது நிலத்தை அடைய முடியாமல் போய்விடும் என்றும், மனுதாரர்களது வீட்டை விட்டு வெளியேற தாவா பாதையை தவிர வேறு வழியில்லை என்றும், எனவே தாவாவில் 11.06.2024 ம் தேதியன்று போடப்பட்டுள்ள வாய்தா தேதியை இன்றோ அல்லது அருகாமையிலுள்ள தேதிக்கோ முன்கொணர்ந்து உத்தவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் 11.06.2024 ல் போடப்பட்டுள்ள தாவாவை முன்னெடுப்பு செய்வதால் அதிலுள்ள மனுக்களும் முன்னிட்ட தேதிக்கு எடுக்க முடியாது என்றும், அதற்கு தனியே மனுதாக்கல் செய்ய வேண்டும் என்றும், எப்படியாவது 1 ம் மனுதாரரை மிரட்டி அவரின் பட்டா நிலத்தில் வண்டித்தடம் அமைக்க வேண்டி இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் நேரத்தை வீண்விரயம் செய்து வருகிறார்கள் என்றும், ச.எண்.169/1B4 ல் உள்ள விவசாய நிலத்தில் வண்டித்தடம் ஏதும் இல்லை என்றும், அதற்கு எந்தவொரு ஆவணமும் மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்வாதம் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள்/வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாக்கல் செய்து, அசல் வழக்கிலும், இடைநிலை மனுவிலும் 11.06.2024ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் மனுதாரர்கள் வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா மண்பாதையின் பௌதீக தன்மையையும் 1ம் எதிர்மனுதாரர் மாற்ற முயற்சி செய்து வருகிறார் என்றும், 2ம் மனுதாரரின் பட்டா நிலத்தை சுற்றி கம்பிவேலி போடுவதாக மிரட்டி வருகின்றனர் என்றும், அவ்வாறு கம்பிவேலி வைத்து அடைத்துவிட்டால் மனுதாரர்கள் எவ்வகையிலும் அவர்களது நிலத்தை அடைய முடியாமல் போய்விடும் என்றும், மனுதாரர்களது வீட்டை விட்டு வெளியேற தாவா பாதையை தவிர வேறு வழியில்லை என்றும், அதனால் எதிர்வரும் 11.06.2024ம் தேதியில் வைக்கப்பட்டுள்ள வழக்கை முன்னெடுப்பு செய்து அதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைநிலை மனுக்களில் விசாரணை நடத்த வேண்டும் என தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iv) எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கை முன்னெடுப்பு செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் இடைநிலை மனுக்களை முன்னெடுப்பு செய்ய இயலாது என்றும், அதற்கு தனி மனுக்கள் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்துள்ளதை கருத்தில் கொள்கையில், ஒரு அசல் வழக்கில் தரப்பினரால் தாக்கல் செய்யப்படும் இடைநிலை மனுக்களானது மேற்படி அசல் வழக்கின் ஒரு அங்கம் என்பதால் மேற்படி இடைநிலை மனுக்கள் அசல் வழக்கை சார்ந்திருப்பவை எனவும், மேற்படி இடைநிலை மனுக்கள் தனி செயல்பாடற்றவை எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது. உதாரணமாக, ஒரு அசல் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்படும் பட்சத்தில், அதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைநிலை மனுக்களும் தள்ளுபடி செய்யப்படும் என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

(v) அவ்வாறு உள்ள நிலையில், இடைநிலை மனுக்களை முன்னெடுப்பு செய்ய தனியாக மனு தாக்கல் செய்ய வேண்டுமென்ற 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்வாதம்

ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கும், அதிலுள்ள இடைநிலை மனுக்களும் 11.06.2024 ம் தேதியில் வாய்தா நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் இன்றைய தேதியிலோ அல்லது குறுகிய கால கட்டத்திற்குள் ஏதேனும் முந்தைய தேதிகளில் வழக்கை முன்னெடுப்பு செய்து வாய்தா நிர்ணயிக்கப்படுவதால் எதிர்தரப்பினர்களுக்கு எவ்வித பாதகமான சூழ்நிலையும் ஏற்பட போவதில்லை என்பதால், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. வழக்கு முன்னெடுப்பு நாள்.10.06.2024 ஆக நிர்ணயிக்கப்படுகிறது. தரப்பினர்கள் ஆஜராக உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 07 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.06.07 18:12:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.06.07 18:12:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.